DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 37/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | சுசிலா |
| Father / Husband Name | கார்மேகராஜ் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் சூராணத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் பிரைவேட் பள்ளியில் வேலை செய்து வருகின்றேன். விபத்தில் இறந்த நபர் என் கணவர். எனக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் உள்ளனர். என் கணவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்தார்.

2) கடந்த 29.12.2014 ம் தேதியன்று ஸ்டிரைக் காரணமாக என் கணவர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்ததால் நானும், என் கணவரும் இருசக்கர வாகனத்தில் காலை 09.30 மணியளவில் சிவகங்கை எல்ஐசி ஆபிஸ்க்கு சென்றுவிட்டு காளையார்கோவில் திரும்பும் போது ஒய்யவந்தான் விளக்கு

ரோட்டின் அருகே வரும் போது மதியம் 12.00 மணிக்கு மேல் இருக்கும் மணி சரியாக தெரியவில்லை.

3) அப்போது என் கணவர் தலையில் இருந்த கேப் காற்றில் பறந்து ரோட்டில் கீழே விழுந்துவிட்டது அதனால் என் கணவர் வண்டியை திருப்பி வந்து தொப்பியை எடுக்க சென்ற போது நான் எங்களது இருசக்கர வாகனத்தில் அருகே நின்றேன் காளையார்கோவிலில் இருந்து வேகமாக வந்த கார் என் கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. மேற்படி விபத்தில் என் கணவருக்கு கண்ணுக்கு இடையில் மூக்கில் காயம் ஏற்பட்டது, வெளியில் எந்த இரத்தமும் காணப்படவில்லை. காலை தூக்கி பார்த்த போது எலும்பு நொறுங்கி இருந்தது. தலையில் அடிபட்டிருந்தது.

4) நான் சம்பவத்தை பார்த்து அழுதி கொண்டிருந்ததை பார்த்து அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து என்னிடம் பேசி யாருக்காவது தகவல் சொல்லச் சொன்னார்கள். நான் எனது போனில் எனது மாமா கண்ணன் மற்றும் தங்கையா ஆகியோருக்கு தகவல் சொன்னேன். 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ரோட்டில் வந்தவர்கள் உதவியுடன் எனது கணவரை ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன்.

5) அங்கு காளையார்கோவில் போலிசார் வந்து விசாரித்தனர். எனது கணவர் பேச முடியாமல் கண் திறக்காத நிலையில் 3 நாட்கள் இருந்ததால் நான் தான் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) அதன் பிறகு என் கணவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு அன்றைய தினமே கொண்டு சேர்த்தேன். 01.01.2015 ம் தேதி காலை என் கணவர் இறந்துவிட்டார். எனது கணவரின் பிரேதத்தை அன்றைய தினமே விசாரணையை முடித்து என்வசம் ஒப்படைத்துவிட்டார்கள். மேற்படி விபத்தை ஏற்படுத்திய இண்டிகா காரை ஓட்டி வந்த ஓட்டுநரின் பெயர் கார்த்திக் என்று பின்பு தெரிந்து கொண்டேன். எனது கணவரின் இறப்பிற்கு காரை அதிவேகமாக ஓட்டி வந்த எதிரி தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) என்னை போலிசார் எந்த மருத்துவமனையில் வைத்து

விசாரித்தார்கள் என்றால் சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் எழுதிய பேப்பரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள் நான் கையொப்பம் செய்தேன்.

2) விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் மற்றும் ஓட்டுநரின் பெயரை நான் சொல்லவில்லை என்றாலும், போலிசார் தான் எழுதினார்கள் என்றாலும் சரிதான். விபத்து நடந்த உடனே 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வழிப்போக்கர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் அதற்குள் மாமாவும் வந்துவிட்டார்கள்.

3) கண்ணன் மற்றும் தங்கையா மருத்துவமனைக்கு தான் வந்தார்களா என்றால் இல்லை சம்பவ இடத்திற்கே வந்துவிட்டார்கள். புகார் கொடுக்கும் போது போலிசார் விசாரித்ததற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சிவகங்கையில் இருந்து காளையார்கோவிலுக்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான்.

4) மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற போது என் கணவர் அணிந்திருந்த தொப்பி காற்று வீசியதால் தெற்கு பக்கமாக தொப்பி விழுந்ததா என்றால் இல்லை ரோட்டின் நடுப்பகுதியில் விழுந்தது. என் கணவர் தொப்பியை எடுப்பதற்காக வாகனத்தை எந்த பகுதியில் நிறுத்தினார் என்றால் போன பகுதி இல்லாமல் திரும்ப வந்து தெற்கு பக்கமாக வாகனத்தை நிறுத்திவிட்டு ரோட்டில் கிடந்த தொப்பியை எடுக்க சென்றார் என்றால் ஆமாம்.

5) ரோட்டின் நடுவில் கிடந்த தொப்பியைத் தான் என் கணவர் எடுக்க சென்றார் என்றால் ஆமாம். நான் அப்போது என் கணவர் தொப்பியை எடுப்பதை தான் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் ஆமாம். என் கணவர் வாகனத்தை நிறுத்திவிட்டு இருபுறமும் பார்க்காமல் தொப்பியை எடுக்கச் சென்றார் என்றால் சரியல்ல இருபுறமும் பார்த்துவிட்டு தான் தொப்பியை எடுக்கச் சென்றார் சம்பவ இடம் அருகே லேசான வளைவு பகுதி இருந்தது.

6) அந்த வளைவு இருந்ததால் தான் வாகனம் வந்தது தெரியவில்லை என்றால் சரியல்ல சற்று தள்ளி தான் வளைவு இருந்தது. விபத்து ஏற்பட்டவுடன் என் கணவரை தூக்கி எந்த திசையில் தூக்கி வைத்திருந்தார்கள் என்றால் வடக்கு பக்கம். வண்டியை நிறுத்தியது ரோட்டின் தென்புறம் என்றால்

சரிதான். அந்த ரோடு 100 அடி அகலமானது என்றால் சரிதான். இந்த ரோடு தொண்டி - மதுரை பிரதான சாலை என்றால் சரிதான்.

7) விபத்தை ஏற்படுத்திய வாகனம் அந்த இடத்தில் நிற்காமல் சென்றுவிட்டது என்றால் சரிதான். என் கணவர் தொப்பி எடுக்க செல்லும் போது கிழக்கிலும், மேற்கிலும் பார்த்து விட்டு சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல என் கணவர் சாலை விதிகளை சரியாக பின்பற்றுபவர். சாட்சிகள் கண்ணன், தங்கையாக எனது உறவினர்களா என்றால் ஆமாம் தங்கையா என்பவர் தற்போது உயிருடன் இல்லை அவர் இறந்து 2 வருடங்கள் ஆகிறது.

8) சாட்சி பட்டியலில் உள்ள சாட்சிகள் 8, 9 எனது உறவினர்களா என்றால் ஆமாம். விபத்து நடுரோட்டில் தான் நடந்தது என்றால் ஆமாம். என் கணவர் அணிந்திருந்த தொப்பி காற்றில் பறந்து நடுரோட்டில் விழுந்ததை அவர் எடுக்கச் செல்லும் போது விபத்து ஏற்பட்டது என்றாலும், என் கணவர் தான் இருபுறமும் கவனிக்காமல் சென்றார் என்றாலும் சரியல்ல. நஷ்ட ஈடு கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9) விபத்திற்கு காரணம் எனது கணவரின் கவனக்குறைவே என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்று போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யான புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.04.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**